Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATTUR**

Case No. CC. 856 /2025

**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | திரு. பிரேம் குமார் | **தொழில்** | டைல்ஸ்வேலை |
| **த/க பெயர்** | திரு. மாதையன் | **கிராமம்/ ஊர்** | சேலம் |
| **வயது** | 42 | **மாவட்டம்** | சேலம் |

| | |
|---|---|
| எதிரிகள் ஆஜர் | 1,2 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 11th day of March 2026

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை–**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் டைல்ஸ் ஒட்டும் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 23.09.2025 அன்று மதியம் 3.30 மணிக்கு நானும் எனது நண்பர் மாதுவும் ஈரோடு இரயில் நிலையத்தில் இருந்தபோது ஆஜர் எதிரிகளை ஜோலார்பேடடை காவல் நிலையத்தார் விசாரித்து கொண்டிருந்தனர். அப்போது, எதிரிகள் நகை திருடியது சம்மந்தமாக சாட்சி கையொப்பம் செய்யுமாறு கேட்டனர். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா ஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் மாலை 06.00 – 6.30 மணியளவில் குமாரபாளையத்தில் எதிரிகள் நகையை அடகு வைத்துள்ளதாகவும், அதை கைப்பற்ற எங்களை அழைத்து சென்றார்கள். பின்னர் எதிரியின் நண்பரிடமிருந்து கைப்பற்றினார்கள். அதற்காக நான் கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகசரில்

உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் ஈரோடு இரயில் நிலையத்தில் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தேன். எதிரிகள் நண்பரை நான் நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து உருக்கப்பட்ட நிலையில் இருந்தது. போலீசார் என்னை கேட்டு கொண்டதன் பேரில் அ.சா1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –** இல்லை

| | |
|---|---|
| Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct. | |
| Signature of Witness | Judicial Magistrate No.III(FAC)<br>Tirupathur. |